## சிலி



# எதிர்பாரா ஊழியர்கள்

*தங்கள் ஜெபத்திற்கு தேவன் அவ்வளவு வேகத்தில் பதிலளித்தது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.*

தொலைதூர தீவு ஒன்றில் ஊழியம் செய்யவேண்டும் என்பது அல்வரோ மற்றும் நடலியாவின் திட்டத்திலேயே இல்லை.

சிலியைச் சேர்ந்த அந்தத் தம்பதியருக்குத் திருமணமாகி ஒன்பது வருடங்கள் கடந்திருந்தன. அவர் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் சபையில் பல் மருத்துவராகப் பணியாற்றினார். அவரது மனைவி சிலி அட்வென்ட்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் உடல் சிகிச்சையாளராக இருந்தார். அவர்களுக்கு 30 வயது மகள் இருந்தாள், அவளது பெயர் கேடலினா.

அப்போதுதான் அவர்கள் அட்வென்ட்டிஸ்ட் தன்னார்வலர் சேவை பற்றி ஒரு பிரசங்கத்தைக் கேட்டார்கள். அந்த அமைப்பு உலகளாவிய அட்வென்ட்டிஸ்ட் சபையின் ஊழியத்திற்கு உதவுவதற்காகத் தொடங்கப்பட்டது; உலகத்திற்கு நற்செய்தியை அறிவிப்பதே அவர்களுடைய பணி. அந்த அமைப்பில் சேர தேவன் தங்களை அழைப்பதாக அந்தத் தம்பதியர் உணர்ந்தார்கள்.

“நாம் குடும்பமாக இந்த ஊழியத்தைச் செய்யலாமா?” என்று அல்வரோவும் நடலியாவும் ஒருவரிடம் ஒருவர் கேட்டுக்கொண்டார்கள்.

அவர்கள் தங்களை வயதானவர்களாக உணர்ந்தார்கள். ஏனென்றால், அந்தப் பல்கலைக்கழகத்தில் படிக்கிற 20 வயதைத் தாண்டிய மாணவர்கள்தாம் பொதுவாக அந்தத் தன்னார்வ ஊழியச் சேவையில் சேருவதுண்டு. அல்வரோ மற்றும் நடலியா இருவருக்குமே 35 வயது.

அந்தத் தம்பதியர் பல்கலைக்

கழக போதகரிடம் அதுபற்றிப் பேசினார்கள், அவர்தாம் தன் பிரசங்கத்தின்போது அந்த அழைப்பைக் கொடுத்திருந்தார்.

எல்லா வயதினரிலும் தேவன் தமக்கு ஊழியம் செய்ய மக்களை அழைப்பதாக போதகர் உறுதியளித்தார். அதனால் அந்தப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தன்னார்வலர்களுக்கான பயிற்சியில் அந்தத் தம்பதியர் கலந்துகொண்டார்கள். அட்வென்ட்டிஸ்ட் திருச்சபையின் VividFaith.org என்கிற இணைய தளத்தில் எங்காவது பணியிடம் காலியாக இருக்கிறதா என்று தேடினார்கள். அது தன்னார்வ ஊழியர்கள் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான ஒரு இணையதளம். எரிமலை தீவான ஈஸ்டர் தீவில் பணியிடம் காலியாக இருந்தது; அந்தப் பணிக்கு விண்ணப்பித்தார்கள்.

சில நாட்கள் கழித்து, அவர்களுக்கு பதில் வந்தது. அவர்களது விண்ணப்பம்ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இரண்டு வாரங்களில் அந்தத் தீவுக்கு அவர்கள் புறப்படுமாறும் பதில் அனுப்பியிருந்தார்கள். தங்கள் ஜெபத்திற்கு தேவன் அவ்வளவு வேகத்தில் பதிலளித்தது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஊழியர்களாக அவர்கள் பெற்ற முதல் பாடம் அது. எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருந்ததையும், தாங்கள் தங்களைக் கீழ்ப்படுத்தவேண்டிய அவசியத்தையும் உணர்ந்தார்கள்.

இரண்டு வாரங்கள் கழித்து அந்தத் தம்பதியர் விமானத்தில் ஏறி, ஐந்தரை மணி நேரம் பயணம் செய்து, ஈஸ்டர் தீவைச் சென்றடைந்தார்கள். அந்த விமான நிலையம் தான் உலகத்திலேயே மிகத்தொலை தூர நிலையமாகக் கருதப்படுகிறது. அந்த விமானநிலையத்திற்கு அடுத்து பக்கத்திலுள்ள விமான நிலையம் 2350 மைல்கள் (3780 கி.மீ) தொலைவில் உள்ளது.

அங்குள்ள கலாச்சாரம் முற்றிலும் வித்தியாசமாக இருந்தது. சிலியில் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது, ஆனால் ஈஸ்டர் தீவில் மூதாதையர் நம்பிக்கை அதிக செல்வாக்கு செலுத்தியது.

சிலியின் பிரதான பகுதியில் ஸ்பானிஷ் மொழி அதிகம் பேசப்படுகிறது, ஆனால் அந்தத் தீவில் ரபானுய் எனும் மொழியை மக்கள் அதிகம் பேசுகிறார்கள்.

சிலிதான் உலகத்திலேயே மிகவும் நீளமான நாடு. வடக்கிலிருந்து தெற்கே அதன் நீளம் 2650 மைல் (4,265 கி.மீ). ஆனால் ஈஸ்டர் தீவின் மொத்த நிலப்பரப்பு 63 சதுர மைல்கள் (101 சதுர கி.மீ). அதன் மக்கள் தொகை 3,800. பெரும்பாலான மக்கள் அத்தீவின் தலைநகரான ஹங்கா ரோவில் வசிக்கிறார்கள்.

சிலியில் உணவுக்கு தட்டுப்பாடே கிடையாது. ஆனால் இந்தத் தீவில் உணவுப்பகிர்மானக் கடையில்தான் ரொட்டி வழங்கப்படும். சில சமயங்களில் மாவு தட்டுப்பாடாகிவிடும்; படகுமூலம் உணவு கொண்டுவருவார்கள், கடல் அலைகளைத் தாண்டி படகுகளை ஓட்டி வருவது மிகவும் கடினமாக இருக்

கும். நிலைமை இன்னும் மோசமாகிற வகையில், சிலியிலிருந்து வருகிற மக்களை அந்தத் தீவில் இருப்பவர்களுக்குப் பிடிக்காது என்பதை அதன்பிறகுதான் அந்தத் தம்பதியர் அறிந்துகொண்டார்கள். அதனால் அங்கு நண்பர்களை உருவாக்குவதும், மக்களுடைய நம்பிக்கையைப் பெறுவதும் கடினமாக இருந்தது.

காலதாமதமின்றி தேவன் தங்களை அந்தத் தீவிற்குக் கொண்டு வந்ததால், அவரை நம்பவும் அவரது கரங்களைப் பற்றிக்கொள்ளவும் அந்தத் தம்பதியர் தீர்மானித்தார்கள்.

பிறகு அற்புதமான வகையில் தேவன் செயல்பட ஆரம்பித்தார்.

அதிக மக்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பு கிடைக்கவும், அதன்மூலம் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையைப்பற்றிச் சொல்லவும் வசதியாக சுற்றுலாத்துறையில் வேலையைத் தெரிந்துகொண்டார், பல்மருத்துவத் துறையில் பணி தேடவில்லை. நடலியா உள்ளூர் மருத்துவமனை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தார். ஒரு சிறு மோட்டார் வண்டியை வாங்கி வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து, வேதப்பாடங்கள் நடத்தினார்கள்.

அங்கிருந்த செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் சபையைக் கவனிக்கிற பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் அங்கு சென்ற சமயத்தில் 10 முதிய விசுவாசிகள் மட்டுமே இருந்தார்கள். அடுத்த வருடத்தில், ஒரு போதகர் செய்கிற அனைத்து பணியையும் அல்வரோவும் நடலியாவும் செய்ய ஆரம்பித்தார்கள்; ஞானஸ்நானம் கொடுப்பது, திருமணம் நடத்திவைப்பது மட்டும் செய்யவில்லை. ஒரு அடக்கஆராதனையைக்கூட நடத்தினார்கள்.

செயல்படாமல் இருந்த பாத்பைண்டர் மற்றும் அட்வென்சரர்ஸ் குழுக்களை ஆரம்பித்தார்கள். ஆச்சரியமூட்டுகிற வகையில் 25 சிறுவர்கள் முதல் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். மாதங்கள் கடந்தன, கலந்துகொள்கிற சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. பிறகு, பாத்பைண்டர் குழுக்களை நடத்துவதற்கு மாஸ்டர் கைடுகளைப் பயிற்றுவித்து பாத்பைண்டர் மற்றும் அட்வஞ்சரர்ஸ் குழுக்களை அவர்களுடைய வசம் ஒப்படைத்தார். அவர்கள் அங்கிருந்து கிளம்பிய சமயத்தில் இரண்டு குழுக்களிலும் 95 சிறுவர்கள் இருந்தார்கள், ஓய்வுநாட்களில் அந்தச் சிறுவர்கள் தங்கள் பெற்றோரை ஆலயத்திற்கு அழைத்து வந்துகொண்டிருந்தார்கள். பாத்பைண்டர் குழுவில் சேர்ந்த ஒரு பிள்ளையும் பிள்ளையின் அம்மாவும் ஞானஸ்நானமும் பெற்றிருந்தார்கள். ஒரு போதகர் அங்கு விமானத்தில் சென்று, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

அந்த வருடம் மிகவும் சவாலான ஒரு வருடமாக இருந்ததாகவும், ஆனால் அதில் தாங்கள் எந்த மாற்றமும் செய்ய விரும்பவில்லை என்றும் அல்வராவும் நடலியாவும் தெரிவித்தார்கள்.

தேவனே அந்தத் தீவின் மக்களை அணுக வழி திறந்தார்.